*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – VI Issue - 1
December -2021

# நடந்து செல்லும் நீரூற்று காட்டும் பதிலீடு

கற்பகசெல்வி,மு
முனைவர் பட்ட ஆய்வாளர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் ராசரத்தினம் மகளிர் கல்லூரி
சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author:selvinila675@gmail.com**

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் தன்னுடைய வாழ்வினை இன்பம் நிறைந்தது துன்பம் நிறைந்தது என்று பாகுபடுத்திப்பார்ப்பது தன்னுடைய மனத்தைப் பொறுத்துத் தான் அமைகின்றது எனலாம். மனம் சார்ந்த அறிவியல் உளவியல் எனப்பட்டது. உடலுக்கு அழிவுண்டு. உயிருக்கு அழிவில்லை. அவ்வுயிரின் உயரிய தேடலை விளக்குவது தத்துவம். தொடக்க காலத்தில் உளவியலும் தத்துவத்துடன் தொடர்புடையதாகவே உள்ளது. தன்முனைப்பின் பின்னணியில் சமூகக் காரணிகளையும், சமூகப்பயன் மதிப்புகளையும் இணைத்து ஆளுமைக் கோட்பாடுகளை உருவாக்கி வளர்த்தனர். இதனடிப்படையில் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களது ‘நடந்து செல்லும் நீரூற்று’ எனும் படைப்பு ஆய்வு செய்யப்படுகின்றது. உணர்வுகளிலும், உற்சாகத்திலும், அனுபவங்களை உள்வாங்கிப் புலப்படுத்துவதிலும் ஏனைய மனிதர்களிலிருந்து கவிஞர்கள் சற்றேனும் வித்தியாசப்பட்டவர்கள் என்றும், கவிதை ஒரு வித்தியாசமான மன எழுச்சியினால் உருவாக்கப்படுகிறது என்றும் புனைவியல் படைப்பாளர்கள் பேசுகிறார்கள். இத்தகைய பதிலீடு எனும் உளவியல் தன்மை என்ன?, பதிலீடு தன்மை பெற்ற படைப்பாளர்கள் யாவர்? என்னும் சான்றுகள் இங்கே இடம்பெற்றுள்ளன.

**குறிப்புச்சொற்கள்: பதிலீடு, உளவியல் தன்மை, நீரூற்று,**

## முன்னுரை

மனிதன் தன்னுடைய வாழ்வினை என்று பாகுபடுத்திப்பார்ப்பது தன்னுடைய இன்பம் நிறைந்தது துன்பம் நிறைந்தது மனதைப் பொறுத்துத் தான் அமைகின்றது

எனலாம். மனம் சார்ந்த அறிவியல் உளவியல் எனப்பட்டது. உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனையும் 'மானுடம்' என்ற பொதுப்பண்பில் அடக்க முடியும். எனினும் மனிதனின் செயற்பாடுகளை உற்று நோக்கினால் ஒவ்வொருவரிடமும் தனித்த இயல்புகள் காணப்படுகின்றன என்பதை அறிய முடியும். மனிதன் பிறரிடம் நடந்து கொள்ளும் விதம் நடத்தை எனப்படுகிறது. இத்தகைய நடத்தை பற்றி ஆராயும் துறையே உளவியலாகும்.

'ஓம்' என்னும் ஓங்கார ஒலி உலகின் படைப்புத் தத்துவத்தை உணர்த்தும் தன்மையுடையது. உடலும் உயிரும் இணைந்தது மானுடப்படைப்பு. இப்படைப்பின் இயக்கத்தில் உடலுக்கு அழிவுண்டு. உயிருக்கு அழிவில்லை. அவ்வுயிரின் உயரிய தேடலை விளக்குவது தத்துவம். தொடக்க காலத்தில்; 'உளவியல்" தத்துவத்துடன் தொடர்புடையதாகவே கருதப்பட்டது.

∴பிராய்டு, யுங் ஆகியோரின் உளவியல் கோட்பாடுகளைத் தொடர்ந்து ஆல்பிரட் அட்லர் (Alfred Adler) கேரன் ஆர்ன் (Karen Horney) எரிக்.எச்.எரிக்சன் (Erik.H.Erikson) போன்றோர் தன்முனைப்பின் உளவியலை விளக்கினர். இவர்கள் தன்முனைப்பின் பின்னணியில் சமூகக் காரணிகளையும், சமூகப் பயன் மதிப்புகளையும் இணைத்து ஆளுமைக் கோட்பாடுகளை உருவாக்கி வளர்த்தனர். இதனடிப்படையில் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களது 'நடந்து செல்லும் நீரூற்று' எனும் படைப்பு ஆய்வு செய்யப்படுகின்றது.

## படைப்பு வழிமுறை

உளவியல் திறனாய்வு, குறிப்பிட்ட ஓர் இலக்கியம் என்றில்லாமல், ஒரு பொதுவான நிலையில் இலக்கியத்தில் பிறப்பு அல்லது வழிமுறை பற்றி அறிதற்கு விளக்க முறையில் அக்கறை கொள்கிறது. 'இலக்கியம் எவ்வாறு படைக்கப்படுகிறது, அதன் வழிமுறைகள் என்ன என்பதற்குரிய முயற்சி, பல காலமாகவே இருந்து வருவதுதான். முக்கியமாகப் புனைவியல் படைப்பாளர்கள் இதில் ஈடுபாடு காட்டினர். வோர்ட்ஸ் வொர்த்தின் பிரசித்தமான கட்டுரையில் (Preface to Lyrical Ballads) இதனை வெகுவாகக் காண முடியும்" 1

உணர்வுகளிலும், உற்சாகத்திலும், அனுபவங்களை உள்வாங்கிப் புலப்படுத்துவதிலும் ஏனைய மனிதர்களிலிருந்து கவிஞர்கள் சற்றேனும வித்தியாசப்பட்டவர்கள் என்றும், கவிதை ஒரு வித்தியாசமான மன எழுச்சியினால் உருவாக்கப்படுகிறது என்றும் புனைவியலாளர்கள் பேசுகிறார்கள். இத்தகைய 'மனஎழுச்சியை' உண்டாக்கிக் கொள்வதற்காகக் கவிஞர்கள் பலர் குடிப்பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கிறார்கள் என்றும் சொல்லப்படுவதுண்டு. "கவிஞர்கள் சிலர் 'பெருங்குடிமக்களாகப்' போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுப் போவதுண்டு

என்பது உண்மையே. ஆனால், எல்லாரும் அல்லர். சிலர் மட்டுமே அந்நிலைக்கு உள்ளாகின்றனர். மேலும், உரைநடை (சிறுகதை, நாவல்) எழுத்தாளர்கள் இத்தகைய போதை எழுச்சியை ஒரு தேவையாகக் கருதுவதில்லை” [2]

## பதிலீடு

உணர்வு வயப்படுதல் என்பது பற்றியக் கருத்துக்களை, சற்று வேறு வகையில், பகுப்பு முறை உளவியல் ஆராய்ச்சியில், 'நரம்பியல் செயல் திரிபுகளாக' (neurosis) விளக்கப்படுகின்றன. 'படைப்பு எழுத்தாளர்களும் பகல் நேரக் கனவு காணுதலும்' என்னும் தனது கட்டுரையில் ∴பிராய்டு இவ்வாறுதான் படைப்பு வழிமுறைகளுக்கு விளக்கம் காண முயலுகிறார்.”[3] கண்ணதாசன், நா.முத்துக்குமார் போன்ற திரையிசைக் கவிஞர்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

நனவிலி மனத்தின் (unconscious mind) ஒரு வெளிப்பாட்டு முறையாக அதனை பிராய்டு பார்க்கிறார். 'பிள்ளைப் பருவத்தில் குழந்தைத்தனமான விளையாட்டுக்கள் என்பது, வயது ஏறிவரும் காலத்தில் அதனை விடுத்து அதன் பதிலியாக கற்பனைக் கனவுகளோடு மனிதன் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். அதாவது, சாதாரணமான சங்கதியை - செய்தியை - செயலைச் சாதாரணமாக, இயல்பாகப் பார்க்காமல் ஓர் அற்புதமான - மாயமான – ஆற்றலாகவும் - பொருளாகவும் ஒரு கனவுத்தோற்றத்தின் தன்மையோடு பார்த்தல் விநோதப்படுத்தல் ஆகும்.

பாரதிதாசன் தன்னுடைய,புரட்சிக்கவி காப்பியத்தில் நிலா குறித்து அழகுணர்ச்சியோடு பாடத் தொடங்கி பொதுவுடைமைக் கருத்தோடு நிறைவு செய்வதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

**“நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து**
**நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்**
**கோல முழுதுங் காட்டிவிட்டால் காதல்**
**தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்**
**சிறிது கூழ் தேடுங்கால் பானை ஆரக்**
**கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்**
**கவின் நிலவே உனைக்காணும் இன்பம்தானோ”**

**4 (** ப. 20)

என்ற அடிகளால் இதனை அறிய முடிகின்றது. இத்தகைய விநோதப்படுத்தலை வெளிப்படுத்துவதற்குச் சாதாரண மனிதர்கள் கூசுகிறபோது, நரம்பியல் செயல் திரிபு கொண்டவனோ (அதாவது மனநிலையில் மாறுபாடு கொண்டவன்) அந்த விநோதங்களை வெளியே புலப்படுத்திக் கொள்கிறான் என்று அக்கட்டுரையில் கூறுகிறார் ∴பிராய்டு. மேலும் இத்தகைய விநோதப்படுத்தலின் பின்னணியில் இருப்பவை பாலியல் உணர்வுகளை முதன்மையாகக் கொண்ட நிறைவேற்றப்படாத ஆசைகளே என்றும் அவர் கூறுகிறார். வாசகனும் இத்தகைய மனநிலை காரணமாகவே, குறிப்பிட்ட கலை வடிவத்தில் ஈடுபாடு கொள்கிறான். மேலும், அத்தகைய விநோதப்படுத்தலில் தன்னை அவன் இனங்காணுகிறான் என்பதும் அவர்

வாதம். இத்தகைய வாதத்தைப் பின்பற்றுகின்ற சிலர் இன்னும் ஒரு படிமேலே சென்று “கவிதைப் படைப்பு” வழிமுறை என்பது வலியில் மகிழ்ச்சி பெறுகின்ற, முக்கியமாகப் பாலியல் நிலையிலான அத்தகைய மகிழ்ச்சியைப் பெறுகின்ற (psychic masochism) ஒரு தற்காப்பு உத்தியே என்று வருணிக்கின்றனர்.” [5]

“கலைப்படைப்பை நரம்பியல் செயல் திரிபோடு சேர்த்து வைத்துப் பேசுவதை உளவியல் அணுகுமுறையில் வல்ல பல திறனாய்வாளர்களே மறுக்கின்றனர். ‘நரம்பியல் திரிபுக்கும் கவிதையாக்கத்திற்கும் இடையே பெரும் வேறுபாடு உண்டு. இதனை உணர்வது அவசியம் என்று கென்னத்பர்க் கூறுகின்றார்”[6]

“நரம்பியல் செயல் திரிபு கொண்டவன், விநோதமாக்குதலுக்கு அல்லது அவரை மயக்கக் கற்பனையின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறவன். ஆனால், கவிஞன் விநோதமாக்குதலைக் கட்டுப்படுத்தி அதனை ஆள்கிற திறனுடையவன்’ என்பார். லியோலை ட்ரில்லிங்” [7]எனவே இரண்டையும் ஒன்றாக பார்ப்பது தவறு.

எஸ்.ராமகிருஷ்ணன் பதிலீடு என்ற தன்மை படைத்த பாத்திரத்தைப் படைத்துக் காட்டியுள்ளார். சான்றாகப் பொது வாழ்வில் ஈடுபடும் நபர்களுக்கும், திறனை வெளிப்படுத்திச் சாதனை புரிபவர்களுக்கும் அதிலும் குறிப்பாகப் பெண்களுக்கு இல்லற வாழ்வு அவ்வளவு சிறப்பாக அமைவதில்லை அல்லது பிரிவு ஏற்பட்டுவிடும். இது உண்மை என்பதை நாம் சமகால வாழ் மனிதர்கள் மூலம் கண்டறிந்திருக்கிறோம்.

எஸ்.ராமகிருஷ்ணன் ‘பிழை திருத்துபவரின் மனைவி’ என்ற சிறுகதையில் மந்திரமூர்த்தி என்ற நாளிதழுக்குப் பிழைதிருத்தும் பணி செய்யும் நபரையும் அவரது கவனம் முழுவதும் பிழை திருத்துவதிலேயே இருப்பதாகவும் படைத்துள்ளார். யாருடனும் பேசமாட்டார், யாரைப் பற்றியும் அறிந்து வைத்திருக்கமாட்டார். தனது வீட்டிலும் எப்பொழுதும் பிழைதிருத்தும் பணியையே மட்டுமே செய்து கொண்டிருந்தார். இதனால் அவரது இல்லறம் சிறக்கவில்லை. அவரது மனைவியின் மனஓட்டத்தை அவர் புரிந்து கொள்ளவில்லை. அதனால் அவளுக்கு காகிதம் என்றாலே பிடிக்காது போயிற்று. சிறிய சிறிய துண்டுகளாகக் கிழித்துப் போட்டாள். ஒரு காலகட்டத்தில் உப்பு நீரில் காகிதங்களை ஊறவைத்து உருத்தெரியாமல் அழித்து விடுவார். மனைவிக்கு உடல்நிலை சரியில்லாது போன போது கூட மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். உள்ளே விட்டுவிட்டு வெளியே வந்து அமைதியாக உட்கார்ந்து கொள்வார். தனது முதுகுக்குப் பின் நிற்கும் போது கூடக் காகிதங்களோடு நிற்கிறார் என்பது அவளுக்கு அளவிலடங்கா கோபத்தை ஏற்படுத்தியது.

“அவள் ஆத்திரத்துடன் கேட்டாள், காகிதத்தில் அப்படி என்னதானிருக்கிறது?

அவர் திரும்பிப் பார்க்காமலே 'எனக்குத் தெரியவில்லை' என்றார். அவள் காகிதங்களை உற்றுப் பார்த்தபோது வார்த்தைகள் உடைந்தும் விலகியும் தனியே நடனமாடுவது போலிருந்தது. திடீரென அவரைக் கட்டிக் கொண்டு அழத் துவங்கினாள். அவரது கையில் இருந்த பென்சில் கீழே விழுந்து முனை உடைந்தது. அவர் அவளது கைகளை விலக்கிவிட்டுக் கீழே கிடந்த பென்சிலை எடுத்து மிகக் கவனமாகச் சீவத் துவங்கினார். அவர் முன்பு ஆயிரம் பக்க நாவல் ஒன்று பிழை திருத்தத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தது. தங்கம்மாளின் அழுகை வீடெங்கும் கரைந்து ஓடிக் கொண்டிருந்தது" (ந.செ.நீ.,ப.16). இவ்வாறாகப் பதிலீட்டுப் பண்போடு எஸ்.ராமகிருஷ்ணன் மந்திரமூர்த்தியைப் படைத்துக்காட்டியுள்ளார்.

"பனாரஸ்" என்ற சிறுகதையில், ஒரு பயணி படகோட்டியிடம் கங்கையைக் கடந்து ராஜ்காட் போக வேண்டும் என்றார். படகோட்டிஇ தன் படகினை மழையோடு இயக்கினார். அந்தப் பயணத்தின் போது, பயணி எத்தனையோ கேள்விகளைக் கேட்கிறான். பல்வேறு விதமான மர்மம் நிறைந்த சடங்குகள் கங்கைக் கரையோரத்து நகர்களில் நடைபெறுவது நாம் அறிந்த ஒன்று தான். அதைப்பற்றி விசாரிக்கிறான். ஒரு நீல நிற ஒளி தெரிவதைப்பற்றி விசாரிக்கிறான். வயதானவரை உயிருடன் இருக்கும் போதே கல்லைக் கட்டி இறக்குகிறார்கள், அகி ஹட் வந்த போது இது என்ன இடம் என்றான். எதற்கும் பதில் சொல்லாதவனாகப் படகோட்டி தனது வேலையில் மட்டும் கவனமாக இருந்தான். இது போன்ற பலரை நாம் பார்த்திருப்போம். தனது வேலையில் கவனமாக இருக்கும் போது பிறர் வினாக்களுக்குப் பதில் சொல்லமாட்டார்கள்.

'நடந்து செல்லும் நீரூற்று' என்னும் சிறுகதையில் வரும் திருவேங்கடம், ஒரு நாள் தவறாது காலையில் விரைவாகவே கடைக்குச் செல்கிறார். இரவு தாமதமாகத்தான் வருகிறார். இயல்பான ஆண்களைப் போல் கடைக்கு வரும் பெண்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. மனைவியை வெளியூர் அழைத்துச் சென்ற போதும் கூட பணிநிமித்தம் சென்றவர் போல ஒரு சர்பத் கூட குடிக்கவில்லை. தொழில் மீது இவர் கொண்டுள்ள கவனம் இவரது மனைவியையோ, குழந்தையையோ கவனிக்க விடாமல் தடுக்கிறது. குழந்தை பிறந்தது.

"மனோன்மணி அவர் ஆசையாகக் குழந்தையைப் பார்ப்பார் என்று நினைத்தாள். ஆனால், அவர் கையில் குழந்தையைத் தந்த போது இரண்டு நிமிஷம் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருநத்து விட்டுத் திரும்பவும் அத்தையின் கைகளில் கொடுத்துவிட்டார். மனோன்மணி அதற்கும் அழுதாள். திருவேங்கடம் அதன் பிறகு அரைமணி நேரம் மருத்துவமனையின் வளாகத்தில் இருந்த மரத்தடியில் நின்று கொண்டிருந்தார். காப்பி சாப்பிடும் நேரத்தில்

அவரைத் தேடிய போது ஊருக்குப் போய்விட்டதாகச் சொல்லிய மனோன்மணியின் அப்பா, அவன் அப்படித்தான் இருப்பான், விட்டுத்தள்ளு என்றார்." (ந.செ.நீ.,ப.33) என்று திருவேங்கடம் பாத்திரத்தை இதற்குச் சான்றாக்கியுள்ளார் எஸ்.ராமகிருஷ்ணன்.

பி. விஜயலட்சுமியின் "சிகிச்சைக் குறிப்புகள்" என்னும் சிறுகதையில், தன் படிப்புக்கும் தன் உணர்வுகளுக்கு எதிராக நிற்கும் கணவனோடு உடலுறவு கொள்ள மறுக்கிறாள் விஜயலட்சுமி. கணவனின் வன்புணர்ச்சி, மாமனார் வீட்டிலுள்ளவர்கள் கொடுத்த அடி, நடந்த அவமானங்கள் ஆகியவற்றால் மனச்சிதைவுக்கு உள்ளாகின்றாள். இவளும் பதிலீடு என்ற சிந்தனைக்குச் சான்று எனலாம். தனது திறமைகளை வெளிப்படுத்திச் சாதிக்க நினைக்கும் பெண்கள் அதற்குத் தனது குடும்ப வாழ்வு மற்றும் குடும்ப உறவுகள் தடையாக இருக்கும் போது இது போன்ற நிலைக்கு உள்ளாகிறார்கள்.

இவ்வாறு பதிலீடு என்னும் தன்மை உடைய பாத்திரங்கள் நமது அன்றாட வாழ்வில் கடந்து செல்லும் நிலை உள்ளதைப் பிரதிபலிப்பதாக எஸ்.ராமகிருஷ்ணன் படைப்புகள் உள்ளன. உண்மையான சமூக அக்கறையுள்ள ஒவ்வொரு படைப்பாளனும் சமூக நலன் கருதியே தன்னுடைய பாத்திரம், கதைக்களம் போன்றவற்றைப் படைக்கிறார்கள். மனதளவில் பல மாற்றம் திரிபு அடைந்து வாழும் மனிதர்கள் பலரைக் கொண்ட சமூகமாக இன்றைய சமூகம் திகழ்கின்றது. இக்காலகட்டத்தில் நம்மோடு பழகும் பலரையும் புரிந்து கொண்டு ஓர் இணக்கமான வாழ்வு வாழ இது போன்ற உளவியல் சார்ந்த படைப்புகளும் அப்படைப்புகள் சார்ந்த ஆய்வுகளும் தேவை. இத்தேவை நிறைவேற இக்கட்டுரை ஒரு வடிகாலாக அமையும் என்பதில் ஐயமில்லை..

**அடிக்குறிப்புகள்**


1. David Daiches (1964). Critical Approaches to Literature, London. P.330
2. Edmund Bergler (1950). The Writer and the Psycho analysis New York P.43.
3. Kenneth Burke, (1941). The Philosophy of Literary Form, New York,
4. Lionel Trilling, Freud and Literature 20th Century Literary Criticism (ED) David Lodge .P.276
5. Malcolm Cowley, Thomos, Daniel Yound Convessar tatuions with Cowly (ED) (1983). P.85
6. Sigmund Freud, Creative writers and day, dreaming 20th Century Literary Criticism (ED), David lodge .P.37

7. சந்திரமோகன், சிந்தனையாளர் ஃபிராய்டு,
8. சாரதாம்பாள், செ. இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்,
9. பாரதிதாசன் கவிதைகள், ப.20
10. நடந்து செல்லும் நீரூற்று, எஸ்.ராமகிருஷ்ணன்.